**சுருக்கம்**

பள்ளிக் கல்வி – பொது சார்நிலைப் பணி – அரசு/ நகராட்சி/ மாநகராட்சி (சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பள்ளிகள் நீங்கலாக) உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் பணி நிரவல் செய்வது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித்[பக5(1)]துறை**

**அரசாணை (நிலை) எண். 141**

**நாள்: 26.06.2024.**
**திருவள்ளுவர் ஆண்டு 2055**
**குரோதி வருடம் ஆனி 12**
**படிக்கப்பட்டவை :-**

1. அரசாணை (நிலை) எண்.80 பள்ளிக் கல்வித் [ப.க.4(1)] துறை நாள்.14.03.2024.
2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.70358/அ5/இ4/2022 நாள். 24.06.2024.

------

ஆணை,

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் ஆய்வக உதவியாளர் பணியிடங்களைச் சீரமைப்பு செய்திடவும், உபரியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களை (Surplus with person) பணியிடமே அனுமதிக்கப்படாத பள்ளிகளுக்கும், மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் தேவை உள்ள பள்ளிகளுக்கும் பணிநிரவல் செய்திடவும் மற்றும் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களை (Surplus without person) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவையான பள்ளிகளுக்கு பகிர்ந்தளிக்கவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநரின் கடிதத்தில், மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் அரசு/ நகராட்சி/ மாநகராட்சி (சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகள் நீங்கலாக) உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் பணி நிரவல் செய்வது தொடர்பான வழிகாட்டு நெறிமுறைகளை அரசுக்கு அனுப்பி 593 பணியிடங்களில் 94 பணியிடங்கள் நீங்கலாக 499 பணியிடங்களை, காலிப் பணியிடங்களாகக் கருதி பணி நிரவல் மூலம் பூர்த்தி செய்து கொள்ள அனுமதியும் பணி நிரவல் செய்வதற்கான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு அனுமதியும் வழங்கிடுமாறு அரசைக் கோரியுள்ளார்.

3. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை கவனமாக பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, அரசு/ நகராட்சி/ மாநகராட்சி (சென்னை, மதுரை, கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளிகள் நீங்கலாக) உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள

ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் பணி நிரவல் செய்வது தொடர்பாக, பின்வரும் வழிகாட்டி நெறிமுறைகளை வெளியிடலாம் எனக் கருதி அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

(i) ஆய்வக உதவியாளர்களுக்குப் பணி நிரவல் கலந்தாய்வு 01.08.2023 அன்று பள்ளியில் உள்ள மாணவ மாணவியர்களின் எண்ணிக்கையின் படி நடத்தப்பட வேண்டும். ஆய்வக உதவியாளர்களை அந்தந்த மாவட்டத்திற்குள் உள்ள நிரப்பத் தகுந்த காலிப்பணியிடம் மற்றும் தேவையுள்ள பள்ளிகளில் கூடுதல் பணியிடங்களுக்குப் பணி நிரவல் கலந்தாய்வு நடைபெறும். அதன் பின்னர் மாவட்டம் விட்டு மாவட்டத்திற்கான பணிநிரவல் கலந்தாய்வு நடைபெறும்.

(ii) அரசு / நகராட்சி / மாநகராட்சி (சென்னை, மதுரை, கோயம்புத்தூர் நீங்கலாக) உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளின் அளவைப் பதிவேட்டுடன் ஒப்பிட்டு ஆய்வக உதவியாளர் பணியிடங்களுக்கான மொத்தப் பணியிடங்களைப் பள்ளிவாரியாக இறுதி செய்தல் வேண்டும்.

(iii) மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவித்துள்ளபடி மாணவர்கள் எண்ணிக்கையின் அடிப்படையில் மாவட்டத்திலுள்ள அனைத்துப் பள்ளிகளுக்கும் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் எண்ணிக்கை ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

| வ. எண் | மாணாக்கர் எண்ணிக்கை | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் | அரசு/நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் |
|---|---|---|---|
| 1 | 1500 வரை | 1 | ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் |
| 2 | 1501 முதல் 3000 வரை | 2 | |
| 3 | 3001 முதல் அதற்கு மேல் | 3 | |

(iv) மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின்படி மேற்காண் பட்டியலில் குறிப்பிட்டுள்ளவாறு பணியாளர்களை நிர்ணயித்து பணியாளருடன் உபரி, பணியாளரின்றி உபரி பட்டியலை தொகுக்க வேண்டும்.

(v) கலந்தாய்வின் போது மாவட்டத்திற்குள் பணியாளருடன் உபரியாக இருப்பவரை பணிநிரவல் செய்வது மற்றும் பணியாளர் இன்றி உபரியாக உள்ள பணியிடத்தினைப் மேற்காண் அரசாணைப்படி தேவை உள்ள பள்ளிகளுக்கு மாற்றம் செய்வது (Distribution of Surplus post) ஆகியவற்றினை முதன்மைக் கல்வி அலுவலர் நிலையிலேயே மேற்கொள்ள வேண்டும்.

(vi) மாவட்டத்திற்குள் பள்ளிகளுக்கு மாற்றம் செய்ய பணியிடம் இல்லையென்றால் அதன் தேவையையும், மாவட்டத்திற்குள் பள்ளிகளுக்குப் புதிய பணியிடம் வழங்கியது போக மீதம் இருப்பின் அதன் விவரங்களையும், பள்ளிக் கல்வி இயக்ககத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

(vii) **<u>உபரி–கண்டறிதல்</u>**

(1) மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் பணியாளருடன் உபரி எண்ணிக்கை கண்டறியப்பட்டு பட்டியலிடப்பட்டுள்ள ஆய்வக உதவியாளர்களை முதலில் பள்ளி வாரியாக, அப்பள்ளியில் இறுதியாக பள்ளியில் சேர்ந்த நாளின் (Station Seniority) அடிப்படையில் பணிபுரியும் இடத்தில் இளையவர் (Station Junior) எனக் கண்டறிய வேண்டும். அப்பட்டியலை மாவட்ட அளவில் பணிநிரவல் செய்ய ஏதுவாக ஆய்வகப் பணியாளர் பணியில் சேர்ந்து பணிவரன்முறை

செய்யப்பட்ட நாள் அடிப்படையில் பணியில் சேர்ந்த நாளினை கணக்கில் கொண்டு பணிநிரவல் மாறுதலுக்கான பணிமூப்புப் பட்டியல் தயார் செய்ய வேண்டும்.

(2) பணிபுரியும் இடத்தில் இளையவரைக் கண்டறியும் போது 40 சதவீதம் கண் பார்வையற்றவர்கள் மற்றும் 40 சதவீத மாற்றுத் திறனாளிகள் எவரேனும் உபரியாக கண்டறியப்பட்டிருப்பின் அவர்களுக்கு விதிவிலக்கு அளித்து அவருக்குப் பதிலாக அதே பள்ளியில் அடுத்த நிலையில் உள்ள இளையவரை உபரியாகத் தெரிவு செய்து பணி நிரவலுக்கு உட்படுத்த வேண்டும்.

(viii) <u>ஆய்வக உதவியாளருக்குப் பணி நிரவல் கலந்தாய்வு முன்னுரிமை (Priority)</u>

1. மனவளர்ச்சி குன்றிய மற்றும் மாற்றுத் திறனாளி குழந்தைகளின் பெற்றோர்.
2. சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்தவர்கள், டையாலிசிஸ் சிகிச்சை மேற்கொள்பவர்கள், இருதய, மூளைகட்டி அறுவை சிகிச்சை செய்தவர்கள், புற்றுநோயாளிகள்.
3. இராணுவத்தில் பணிபுரிபவர்களின் மனைவியர்.
4. விதவைகள்/ மனைவியை இழந்தவர்கள். 40 வயதைக் கடந்த திருமணம் செய்து கொள்ளாத பெண் பணியாளர்கள் மற்றும் சட்டப்படி விவாகரத்து பெற்ற பெண் பணியாளர்கள்.

(ix) <u>காலிப்பணியிடம்</u>

நிரப்பத் தகுந்த காலிப்பணியிடங்களை ஆவணங்களுடன் ஒப்பீடு செய்து முதன்மைக் கல்வி அலுவலர் தயார் செய்திட வேண்டும்.

(x) <u>கூடுதல் பணியிடம்</u>

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் படி மாணவ மாணவியரின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதுவரை ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் இல்லாத பள்ளிகளில் ஒதுக்கீடு செய்யப்படும் பணியிடங்கள் கூடுதல் பணியிடங்கள்.

ஏற்கனவே ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு மாணவ மாணவியரின் எண்ணிக்கை கூடுதலாக இருப்பின் மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் படி கூடுதல் பணியிடம் வழங்கப்படும்.

(xi) <u>கல்வித் தகவல் மேலாண்மை தளத்தில் பதிவேற்றம்</u>

மேற்காண் பணியாளருடன் உபரி எனக் கண்டறியப்பட்ட ஆய்வக உதவியாளர்களைக் கல்வித் தகவல் மேலாண்மை தளத்தில் (EMIS) மாவட்ட வாரியாக ஒதுக்கப்பட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உள்நுழைவின் மூலம் (CEO Login ID) பணிநிரவல் படிவத்தில் (Deployment Format) பணிநிரவலுக்கு உட்படுத்த வேண்டும். உபரி ஆய்வக உதவியாளர்களை முன்னுரிமை மற்றும் பணிமூப்பு வாரியாக (Priority wise & Seniority order wise) வரிசைகிரமமாக பதிவேற்றம் செய்ய வேண்டும்.

(xii) <u>பணி நிரவல் – பணி மூப்பு (Seniorty)</u>

1. பணிநிரவல் மேற்கொள்ளும்போது நிரப்பத்தகுந்த காலிப் பணியிடத்திற்கு பணிநிரவல் செய்யப்படவேண்டும். மேலும், அவ்வகையில் பணிநிரவல் மேற்கொள்ளும்போது உபரி எனக் கண்டறியப்பட்ட ஆய்வக உதவியாளரில் மூத்தவர் முதலில் பணிநிரவல் செய்யப்படவேண்டும்.
2. ஆய்வக உதவயாளராக பணியிறக்கம் செய்யப்பட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தடையாணை அல்லது பிரத்தியோக ஆணை மற்றும் தீர்ப்பாணை பெறப்பட்ட நிகழ்வுகளில், நீதிமன்ற தீர்ப்பாணைக்கு ஏற்ப செயல்படவேண்டும். Reserve

One Post என தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டிருந்தால் ஒரு ஆய்வக உதவியாளர் பணியிடத்தை நிறுத்தி வைத்திருக்க வேண்டும்.

3. முன்னுரிமைக்குப்பின் (Priority) ஒன்றுக்கும் மேற்பட்டோர் இருப்பின் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை.

   (i) ஆய்வக உதவியாளர் பணியிடத்தில் பணிவரன் முறை செய்யப்பட்ட நாள்.

   (ii) பணிவரன்முறை நாள் ஒன்றுக்கு மேற்பட்டவருக்கு ஒரே நாளாக இருந்தால் அவர்களுடைய பிறந்த நாள் கணக்கில் கொள்ள வேண்டும்.

   (iii) பிறந்த நாள் ஒரே நாளாக இருந்தால் பெயரின் அகர வரிசைப்படி முன்னுரிமை வழங்க வேண்டும்.

   (iv) ஒரு ஆய்வக உதவியாளர் மாவட்டத்திற்குள்ளான கலந்தாய்வில் கலந்து கொண்டு ஒரு பணியிடம் தேர்ந்தெடுத்த பின் மீண்டும் மாநில அளவிலான கலந்தாய்வில் பங்கேற்க இயலாது.

   (v) ஆய்வக உதவியாளர் பணிநிரவல் மேற்கொள்ளும்போது முதலில் மாவட்டதிற்குட்பட்ட பள்ளிகளுக்கு அனுப்பப்பட வேண்டும். அதன் பிறகு மாவட்டம் விட்டு மாவட்டம் பணிநிரவல் செய்யப்பட வேண்டும்.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்.

**பெறுநர்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை-6.
மாநிலக் கணக்காயர், சென்னை-18/35
சம்மந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்கள்

**நகல்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை செயலாளர் அவர்களின்
முதன்மை தனிச் செயலாளர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 26/6/24
அரசு சார்புச் செயலாளர்.

சுருக்கம்

பள்ளிக் கல்வி – அரசு நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் பணிநிரவல் செய்வது மற்றும் காலிப்பணியிடங்கள் பகிர்ந்தளிக்க அனுமதி வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித்[ப.க.4(1)]துறை

அரசாணை (நிலை) எண். 80 நாள் 14.03.2024
திருவள்ளுவராண்டு 2055,
சோபகிருதுவருடம், பங்குனி 1
படிக்கப்பட்டவை:

1. அரசு கடித எண்.14758/ப.க.4(1)/2022, பள்ளிக் கல்வித் துறை, நாள் 14.11.2022.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.70358/ அ5/இ4/2023, நாள் 08.03.2024.

************

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில், அரசு உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப கீழ்க்காணும் அட்டவணைப்படி ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் நிர்ணயிக்கவும் பணிநிரவல் மேற்கொள்ளவும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண். | மாணக்கர் எண்ணிக்கை | மேல்நிலைப் பள்ளி | அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | உயர்நிலைப் பள்ளி | அனுமதிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் |
|---|---|---|---|---|---|
| 1. | 100 முதல் 1000 வரை | 1 | 2539 | -- | |
| 2. | 1001 முதல் 2000 வரை | 2 | 136 | -- | |
| 3. | 2001 முதல் 3000 வரை | 3 | 324 | -- | |
| 4. | 3001 முதல் 4000 வரை | 4 | 41 | -- | |
| 5. | 4001 முதல் 5000 வரை | 5 | 5 | -- | |
| 6. | 5001 முதல் 6000 வரை | 6 | 3 | -- | |
| 7. | 150 மற்றும் அதற்கு மேல் | -- | | 1 | |
| | மொத்தம் | | 3048 | | 2862 |

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், அரசு நகராட்சி / மாநகராட்சி உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் பணிநிரவல் செய்வது மற்றும் காலிப்பணியிடங்கள் பகிர்ந்தளித்தல் குறித்து பின்வரும் தகவல்களை தெரிவித்துள்ளார்.

(i) தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறையின் கீழ் 2862 அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளும் 2913 அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளும் ஆக மொத்தம் 5775 பள்ளிகள் இயங்கி வருகின்றன.

(ii) மேற்காண் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் 5907 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு அதனடிப்படையில் ஆய்வக உதவியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். ஆனால் பெரும்பாலான பள்ளிகளில் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் அனுமதிக்கப்படாமலும், பல பள்ளிகளில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆய்வக உதவியாளர்கள் பணிபுரிந்து வருவதாலும் இதனை சரிசெய்திட வேண்டிய நிலை உள்ளது.

(iii) ஆய்வக உதவியாளர் பணியிடமானது பொது சார்நிலைப் பணியில் வரையறுக்கப்பட்டுள்ள பணியிடமாகும்.

Appointment–

| Category (1) | Method (2) |
|---|---|
| Lab Assistant | I. Transfer from the category of record clerk in the School Education Department in class XXII of the Tamil Nadu General Subordinate services;<br>or<br>II. Recruitment by transfer from persons belonging to School Education in Tamil Nadu Basic Service;<br>or<br>III. By Direct Recruitment if no suitable and qualified candidates are available for appointment by the methods specified in items (1) and (ii) above |

(iv) பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கும் அரசு / நகராட்சி / மாநகராட்சி / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் 6 முதல் 12–ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியர்களின் கற்றல் அடைவினை மேம்படுத்தும் பொருட்டு ஆய்வகச் செயல்பாடுகள் மூலம் உற்றுநோக்கி ஆய்ந்தறிதல், செய்து கற்றலின் மூலம் நிலையான கற்றல் அனுபவத்தைப் பெறுதல், அறிவியல் மனப்பான்மையை வளர்த்துக் கொள்ளுதல் மொழி ஆய்வகங்களின் மூலம் மொழி ஆளுமை பெறுதல் உள்ளிட்ட பல்வேறு திறன்களை பெறும் நோக்கில் பின்வரும் ஆய்வகங்களின் செல்பாடுகள் இருப்பதாக வரையறுக்கப்பட்டுள்ளது. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு.

1. அடல் டிங்கரிங் ஆய்வகம்
2. உயர் தொழில்நுட்ப ஆய்வகம் / மெய்நிகர் வகுப்பறை மூலம் கற்பித்தல்
3. அறிவியல் ஆய்வகங்கள்
4. மொழி ஆய்வகங்கள்
5. தொழிற்கல்வி ஆய்வகங்கள்
6. கணித ஆய்வகங்கள்

(v) பள்ளிக் கல்வித் துறையின் கீழ் இயங்கி வரும் அரசு / நகராட்சி / மாநகராட்சி/ உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளில் செயல்பட்டு வரும் ஆய்வகங்களில் ஆய்வக உதவியாளர் பணி முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளிலும் ஒரு ஆய்வக உதவியாளர் பணியிடம் இருப்பது அவசியமான ஒன்றாகவும் உள்ளது.

<u>**ஒரு ஆய்வக உதவியாளர் பணியிடம் கூட அனுமதிக்கப்படாத பள்ளிகள் விவரம்**</u>

| | |
|---|---|
| உயர்நிலைப் பள்ளிகள் | 408 |
| மேல்நிலைப் பள்ளிகள் | 79 |

(vi) மாணவர் எண்ணிக்கைக்கு ஏற்ப அனைத்து அரசு / நகராட்சி / உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கும் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் கணக்கிடும் போது மொத்தம் 5910 ஆய்வக உதவியாளர்

பணியிடங்கள் மற்றும் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் இல்லாத 487 பள்ளிகள் என 6397 பணியிடங்கள் அனுமதிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. ஆனால் தற்போது அரசால் அனுமதிக்கப்பட்ட ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் 5907 மட்டுமே உள்ளது.

3. மேலும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், கூடுதல் பணியிடங்கள் தற்போதைய நிலையில் அரசால் தோற்றுவித்திட இயலாது என்பதால் மாணவ / மாணவியர் எண்ணிக்கைக்கு ஏற்ப கீழ்கண்டவாறு திருத்திய கணக்கீடு (Revised Norms) அடிப்படையில் அரசு நகராட்சி / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகளுக்கு ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் நிர்ணயம் செய்யப்பட்டால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்குள் அனைத்து பள்ளிகளுக்கும் ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் அனுமதி அளிக்கலாம் என்பதால் கீழ்க்கண்ட அட்டவணைப்படி பணியிடங்கள் நிர்ணயம் செய்ய அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

| வ. எண். | மாணக்கர் எண்ணிக்கை | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளிகள் | அரசு / நகராட்சி உயர்நிலைப் பள்ளிகள் |
|---|---|---|---|
| 1. | 1500 வரை | 1 | ஒவ்வொரு பள்ளிக்கும் ஒரு பணியிடம் |
| 2. | 1501 முதல் 3000 வரை | 2 | |
| 3. | 3001 முதல் அதற்கு மேல் | 3 | |

4. மேலும், மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் ஆய்வக உதவியாளர் பணியிடங்களை சீரமைப்பு செய்திடவும், உபரியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களை (surplus with person) பணியிடமே அனுமதிக்கப்படாத பள்ளிகளுக்கும், மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் தேவை உள்ள பள்ளிகளுக்கும் பணிநிரவல் செய்திடவும் மற்றும் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களை (surplus without person) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவையான பள்ளிகளுக்கு பகிர்த்து அளிக்கவும் ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் ஆய்வக உதவியாளர் பணியிடங்களை சீரமைப்பு செய்திடவும், உபரியாக உள்ள ஆய்வக

உதவியாளர் பணியிடங்களை (surplus with person) பணியிடமே அனுமதிக்கப்படாத பள்ளிகளுக்கும், மாணவர் எண்ணிக்கை அடிப்படையில் தேவை உள்ள பள்ளிகளுக்கும் பணிநிரவல் செய்திடவும் மற்றும் காலியாக உள்ள ஆய்வக உதவியாளர் பணியிடங்களை (surplus without person) மாணவர் எண்ணிக்கையின் அடிப்படையில் தேவையான பள்ளிகளுக்கு பகிர்ந்து அளிக்க அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ஜெ. குமரகுருபரன்,
அரசு செயலாளர்.

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை –6.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலாளர்,
பள்ளிக் கல்வித் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

[signature] 14/3/24
பிரிவு அலுவலர்.
14.3.24

பள்ளிக் கல்வி இயக்ககம், ந.க.எண்: 015803/அ5/இ4/2024
சென்னை-06

தகவலுக்காகவும் உரிய நடவடிக்கைக்காகவும் அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

[signature]
Director of School Education
Chennai-06

14/3/2024

பெறுநர்
அனைத்து மாவட்ட
முதன்மைக் கல்வி அலுவலர்கள்.